வடமாகாண கல்வித் திணைக்களம்
மாதிரி வினாத்தாள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப்பரீட்சை 2017
General Certificate of Education (Adv. level) Examination 2017

கணக்கீடு I Accounting I	33	T	I	இரண்டு மணித்தியாலம் Two Hours

அறிவுறுத்தல்கள்.
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- சுட்டெண் என எழுதப்பட்டிருக்கும் இடத்தில் சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுமுள்ள வினாக்களுக்கு சரியான விடையிளைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்துக்கு மட்டும்	
வினாத்தாள் I இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 - 30	
31 - 50	
மொத்தம்	

சுட்டெண்: ....

01) கணக்கீட்டின் அடிப்படை நோக்கமாக அமைவது?

1) கணக்கு புத்தகத்தில் எல்லா கொடுக்கல் வாங்கல்களையும் பதிவு செய்தல்.
2) தீர்மானம் மேற்கொள்வதற்கான தகவல்களை பாவனையாளர்களுக்கு வழங்குதல்.
3) முகாமைக்கு விபரமான தேவையான கிரய பகுப்பாய்வை வழங்குதல்.
4) நிதி கொடுக்கல் வாங்கல்களைத் திரட்டுதலும், வகைப்படுத்தலும்.
5) நிறுவனமொன்றுக்கு நிதிக்கூற்றுகளினூடாக நிதிப்பெறுபேறுகளை வழங்குதல்.

(.......)

02) நிதி கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் எண்ணக்கரு சட்டகத்துக்கமைய நிதி கூற்றுகளின் அடிப்படை எடுகோள் / எடுகோள்கள்.

1) பணஅளவீடு, காலஅளவீடு
2) அலகுகள். அட்டுறு
3) அலகு சார் மட்டும்.
4) தொடர்ந்து இயங்குதல் மட்டும்.
5) அட்டுறு மட்டும்.

(.......)

03) நிதி நிலமைக்கூற்றில் சொத்துக்களை நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் என வகைப்படுத்துவதற்கு அடிப்படையை வழங்கும் எண்ணக்கரு.

1) தொடர்ந்து இயங்குதல்.
2) அட்டுறு
3) முன்னெச்சரிக்கை
4) பணஅளவீடு
5) வரலாற்றுக் கிரயம்.

(.......)

04) கொடுக்கல் வாங்கல் ஒன்றின் சட்டத்தன்மையை விட அதன் பொருளாதார ரீதியான கருத்து முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதி கணக்கீட்டுப் பதிவு இடம்பெறுகிறது. இதனை விளக்கும் எண்ணக்கரு.

1) தேறல்
2) பொருண்மை
3) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்.
4) பாதுகாப்பு
5) இணைதல்.

(…….)

05) கையடக்க தொலைபேசிகளை விற்பனை செய்யும் நிறுவனமொன்று ரூபா 1500000 க்கு கையடக்க தொலைபேசிகளை கடனுக்கு கொள்வனவு செய்து இவற்றுள் ரூபா 150000 கையடக்க தொலைபேசிகளை திருப்பி அனுப்பியது மிகுதி காசாக செலுத்தப்பட்டது. இவற்றுக்கான மூல ஆவணங்கள்.

1) கொள்வனவுப்பட்டியல், வரவுத்தாள், கைச்சாத்து.
2) விற்பனைப்பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
3) கொள்வனவுப்பட்டியல், செலவுத்தாள், கைச்சாத்து.
4) விற்பனைப்பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
5) கொள்வனவுப்பட்டியல். வரவுத்தாள், பற்றுச்சீட்டு.

(…….)

06) பின்வரும் கூற்றுக்களில் சரியானது / சரியானவை எவை?

A – கடந்தகால கொடுக்கல் வாங்கல்/நிகழ்வு ஒன்றின் விளைவாக எதிர்காலத்தில் வணிகத்துக்கு பொருளாதார நலன்களில் உட்பாய்ச்சலை ஏற்படுத்துவதும் வணிகத்தினால் கட்டுப்படுத்தக் கூடியதுமான வளங்கள் சொத்துக்கள் ஆகும்.

B - கடந்தகால கொடுக்கல் வாங்கல்/ நிகழ்வொன்றின் பெறுபேறாக வணிகத்தினால் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் பொறுப்புக்கள் ஆகும்.

C - வணிகத்தின் உரிமையாளர் சார்பாக காணப்படும் சொத்துக்களின் அளவு உரிமை ஆகும்.

D - உரிமையாளரினால் ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் காரணமாக உரிமையில் நிகழும் அதிகரிப்பு தவிர்ந்த உரிமையில் இடம்பெறும் ஏனைய அதிகரிப்புக்கள் வருமானங்கள் ஆகும்.

E- பற்றுதல் காரணமாக நிகழும் உரிமையின் குறைவு தவிர்ந்த உரிமையில் இடம்பெறும் ஏனைய குறைவுகள் செலவினங்கள் ஆகும்.

1) A மட்டும்
2) A,B மட்டும்
3) A,B,C மட்டும்
4) A,B,C,D மட்டும்
5) A,B,C,D,Eஎல்லாம்.

(…….)

07) லக்ஸ்மன் நிறுவனத்துடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு.

விபரம்	31.03.2017	31.03.2016
மொத்த சொத்துக்கள்	184000	120000
மொத்த பொறுப்புக்கள்	80000	48000

ஆண்டு காலத்தில் வங்கிகடன் தவணைப்பணம் ரூபா 2000 வட்டி உட்பட ரூபா 10000 உரிமையாளர் தனது சொந்த நிதியில் இருந்து செலுத்தியிருந்தார். உரிமையாரின் வதிவிட வீட்டு வாடகை ரூபா 12000 நிறுவனத்தின் காசில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது. 31.03.2016 இல் சொத்தக்களில் உள்ளடக்கப்படாத கடன்கொடுத்தோருக்கு திருப்பி அனுப்பிய இருப்புக்கள் ரூபா 3000 கணக்கேடுகளில் பதியப்பட்டிருக்க வில்லை.

31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம்.

1) ரூபா 34000
2) ரூபா 32000
3) ரூபா 31000
4) ரூபா 29000
5) ரூபா 37000

(…….)

08) 2017 ஏப்ரல் மாதத்துக்கான குமார் நிறுவனத்தின் கொள்வனவு, காசு கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் வருமாறு.

திகதி	பண்டங்களின் பட்டியல் விலை	காசு கொடுப்பனவு
01.04.2017	75000	20.04.2017 இல் செலுத்தப்பட்டது
15.04.2017	50000	22.05.2017 இல் செலுத்தப்பட்டது.

இன் நிறுவனத்தின் கடன்கொடுத்தோர் பண்டங்களின் பட்டியல் விலையில் 5% க்கு வியாபாரக்கழிவும், கொள்வனவு தினத்தில் இருந்து ஒரு மாதத்துக்குள் பணம் செலுத்தப்படுமானால் 10% காசுக்கழிவினையும் வழங்குகின்றனர். கொள்வனவு கணக்கிலும், பெற்ற கழிவு கணக்கிலும், காசு கணக்கிலும் பதிவு செய்யப்படும் தொகைகளைக் கணிக்குக.

	கொள்வனவு கணக்கு (ரூபா)	பெற்ற கழிவு கணக்கு (ரூபா)	காசுகணக்கு (ரூபா)
(1)	125000 வரவு	12500 செலவு	112500 செலவு
(2)	95000 வரவு	12500 செலவு	82500 செலவு
(3)	118750 வரவு	11875 செலவு	106875 செலவு
(4)	118750 வரவு	7500 செலவு	11225 செலவு
(5)	118750 வரவு	7125 செலவு	111625 செலவு

(…….)

09) உருத்திரன் கம்பனியின் நிதி வருடம் 31 மார்ச்சில் முடிவடைகிறது. இக்கம்பனி ஊழியர்களது சம்பளத்தையும், ஊழியர் சேம இலாப நிதித்தொகையினையும் தொடர்ந்து வரும் மாதத்தில் செலுத்துகிறது. 31.03.2017 ல் முடிவடைந்த வருடத்தில் 2017 பெப்ரவரி மாதம் வரையுமான காலப்பகுதிக்கு ஊழியர்கட்கும் மத்தியவங்கிக்கும் செலுத்திய தொகை ரூபா 246400 ஆக இருந்தது ஊழியர் சேம இலாப நிதியத்துக்கு ஊழியர் சம்பளத்தில் 8% மும் கம்பனி 12% மும் பங்களிப்பு செய்கின்றனர். 31.03.2017 இல் முடிவடைந்த நிதி வருடத்துக்கான சம்பளச் செலவீனம் யாது?

(1) ரூபா 268800
(2) ரூபா 246400
(3) ரூபா 240000
(4) ரூபா 224000
(5) ரூபா 272000

(…….)

10) பெறுமதி சேர் வரியுடனான கடன் கொள்வனவு ரூபா 528000 பெறுமதி சேர் வரி 10% கொள்வனவு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. திருத்தப் பதிவினைத் தருக.

(1) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு 48000
கொள்வனவு கணக்கு செலவு 48000

(2) பெறுமதிசேர் வரி கணக்கு வரவு 48000
கொள்வனவு கணக்கு செலவு 48000

(3) பெறுமதிசேர் வரிக் கணக்கு வரவு 48000
கடன்கொடுத்தோர் கணக்கு செலவு 48000

(4) கடன்பட்டோர் கணக்கு வரவு 48000
கடன்கொடுத்தோர் கணக்கு செலவு 48000

(5) பெறுமதி சேர் வரி கணக்கு வரவு 48000
கடனபட்டோர் கணக்கு செலவு 48000

(…….)

11) கம்பனியொன்று 01.04.2015 இல் மாதாந்தம் ரூபா 45000 செலுத்தும் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. 31.03.2016 இல் ரூபா 60000 காப்புறுதி கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கு செலுத்திய காப்புறுதி கட்டணம் ரூபா 560,000 ஆகும். 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்தில் காப்புறுதி கட்டணம் தொடர்பாக,

(1) ரூபா 40,000 முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளது.
(2) ரூபா 60,000 முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளது.
(3) ரூபா 40,000 செலுத்த வேண்டியுள்ளது.
(4) ரூபா 60,000 செலுத்த வேண்டியுள்ளது.
(5) ரூபா 20,000 முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளது.

(…….)

12) வரையறுத்த சாந்தன் பொதுக்கம்பனியின் பரீட்சை மீதி 31.03.2017 இல் சமப்படவில்லை. இவ்வித்தியாசம் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்கொண்ட ஆயிவின் போது பின்வருவனவெளிக்கொணரப்பட்டன.

- கடந்த நிதி வருடம் பதிவழிக்கப்பட்ட நட்டக்கடன் ரூபா 8000 மீளப்பெறப்பட்டமை காசேட்டில் வரவில் பதியப்பட்டு கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கில் செலவிலும் மீளப்பெற்ற அறவிட முடியாகடன் கணக்கில் செலவிலும் பதியப்பட்டு இருந்தது.
- வெளித்திரும்பல் நாளேடு ரூபா 5000 த்தினால் குறைத்து கூட்டப்பட்டிருந்தது.
- வங்கி கூற்றில் காட்டப்பட்டுள்ள வங்கிக்கட்டணம் ரூபா 1200 காசேட்டில் பதியப்பட்டிருக்க வில்லை.
- பெற்றவாடகை ரூபா 18000 காசேட்டில் மட்டும் பதியப்பட்டிருந்தது.

மேலே தரப்பட்டுள்ள பிழைகளைத் திருத்தமுன்பு தொங்கல் கணக்கு மீதியாது

(1) ரூபா 10000 வரவுமீதி
(2) ரூபா 15000 வரவுமீதி
(3) ரூபா 16200 செலவு மீதி
(4) ரூபா 10000 செலவு மீதி
(5) ரூபா 15000 செலவு மீதி

(…….)

➢ **13ஆம், 14ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

மதன் நிறுவனம் மோட்டார் வாகனங்களுக்கு பெறுமானத்தேய்வு ஏற்பாட்டு கணக்கினை பேணி வரவில்லை அந்நிறுவன மோட்டார் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு.

(ரூபா 000)

- 31.03.2017 இல் கீழ் கொண்டு செல்லும் பெறுமதி 10000
- 31.03.2016 இல் கீழ் கொண்டு செல்லும் பெறுமதி 12000
- 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு 800
- 31.07.2016 இல் விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனத்திலிருந்து பெற்ற தொகை 6000
- விற்னை செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தின் 01.04.2016 இல் உள்ளவாறான கீழ் கொண்டு செல்லும் பெறுமதி 4500
- விற்றமோட்டார் வாகனத்துக்கான வருடாந்த பெறுமானத்தேய்வு 1500

13) 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டு காலத்தில் மோட்டார் வாகனத்தை கொள்வனவு செய்கையில் ஏற்பட்ட காசு வெளிப்பாய்ச்சல்.

1) ரூபா 1600000
2) ரூபா 2000000
3) ரூபா 2800000
4) ரூபா 3800000
5) ரூபா 4800000

(…….)

14) மோட்டார் வாகன விற்பனையினால் எழுந்த இலாபம் யாது?

1) 500000
3) 1500000
5) 3000000
2) 100000
4) 2000000

(…….)

15) வணிகமொன்றின் பங்காளர்களான A,B என்போர் இலாபத்தைச் சமமாகப் பகிர்வதால் இலாபத்தை பங்காளர் நடைமுறைக்கணக்கு மாற்றுவதற்குப் பதிலாக பொது ஒதுக்க கணக்கில் பதிவு செய்கின்றனர். பற்றுக்களைப் பதிவிடுவதற்கு ஒவ்வொரு பங்காளருக்கும் தனித்தனியான கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன. 01.04.2016 இல் C இலாபத்தில் சமபங்கு பெறும் வகையில் புதிய பங்காளராகச் சேர்த்துள்ளார். 31.03.2017 இல் பொது ஒதுக்கல் கணக்கினையும் பற்றுக்கள் கணக்கினையும் மூடி இம் மீதிகளைப் பங்காளர் நடைமுறைக்கணக்குக்கு மாற்றுவதென ஏற்றுக்கொள்ளப்பட்டது. மார்ச் 31 இல் உள்ளவாறான கணக்குகளின் மீதிகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

	2017	2016
பொது ஒதுக்கக்கணக்கு	150000	90000
பற்று கணக்கு A	20000	20000
பற்று கணக்கு B	35000	25000
பற்ற கணக்கு C	10000	--

31.03.2017 இல் B,C என்போரின் நடைமுறைக்கணக்கு மீதிகள் முறையே

1) வரவு ரூபா 30000 வரவு ரூபா 10000
2) செலவு ரூபா 30000 வரவு ரூபா 10000
3) செலவு ரூபா 30000 செலவு ரூபா 10000
4) வரவு ரூபா 10000 செலவு ரூபா 40000
5) வரவு ரூபா 60000 வரவு ரூபா 10000

(…….)

16) பின்வருவனவற்றில் எந்த கொடுக்கல் வாங்கல் இருப்பிலும், தேறிய இலாபப் பெறுமதியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

1) ரூபா 2000 காப்புறுதி கட்டணம் செலுத்தப்பட்டது.
2) நிறுவனத்தில் ரூபா 20000 பெறுமதியான பண்டங்கள் களவாடப்பட்டன. இதனை காப்புறுதி கம்பனி தருவதாக ஒப்புக் கொண்டது.
3) ரூபா 15000 கிரயமான பண்டங்கள் ரூபா 20000 க்கு விற்பனை செய்யப்பட்டது.
4) ரூபா 20000 பெறுமதியான பண்டங்கள் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
5) ரூபா 18000 பெறுமதியான பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

(…….)

17) கம்பனியொன்றின் கடன்பட்டோர் ஒருவர் தான் முறிவடைந்து விட்டதாக கம்பனிக்கு அறிவித்திருந்தார். கம்பனி விசேட ஏற்பாடு ஒன்றினைக் செய்திருந்தது. இந்நிகழ்வினைப் பதிவு செய்வதற்கு சரியான இரட்டைப்பதிவு

	வரவு	செலவு
1)	ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு	கடன்பட்டோர் கணக்கு
2)	ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு	அறவிடமுடியாதகடன் கணக்கு
3)	இலாபநட்டகணக்கு	அறவிடமுடியாத கடன் கணக்கு
4)	இலாபநட்ட கணக்கு	கடன்பட்டோர் கணக்கு
5)	இலாபநட்ட கணக்கு	ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு.

(…….)

18) விளையாட்டு கழக மொன்றின் 31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டு தொடர்பாக எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு

- இக்கழகத்தின் கொள்கை வருமதிகளுக்கு கணக்கு பேனுவதில்லை என்ற கோட்பாட்டைப் பின்பற்றுதல்.
- 31.12.2016 இல் வருமானச் செலவு கணக்குக்குரிய சந்தா ரூபா 48000
- 01.01.2016 இல் 10 உறுப்பினர்கள் 2015 ற்குரிய வருடாந்த சந்தா ரூபா 300 படி செலுத்தியிருக்கவில்லை. 8 உறுப்பினர்கள் 2016 ம் ஆண்டுக்கான சந்தாவினை ரூபா 300 படி செலுத்தியிருக்கவில்லை.
- 31.12.2016 இல் முற்பணமாக பெற்றிருந்த சந்தா ரூபா 12000 ஆகும்.

2016 ம் ஆண்டின் பெறுவனவு கொடுப்பனவு கணக்குக்குரிய சந்தா.

1) ரூபா 36000
2) ரூபா 60600
3) ரூபா 56000
4) ரூபா 54000
5) ரூபா 60000

(…….)

19) மணி வியாபாரத்தினது பின்வரும் தரவுகள் 31.12.2016 இல் முடிவுற்ற ஆண்டுக்கு பெறப்பட்டன.

ஏடுகளில் விற்பனையாக பதியப்பட்ட விற்க அல்லது திருப்புக அடிப்படையில் அனுப்பப்பட்ட பண்டங்களின் கிரயப் பெறுமதி. (திருப்பி அனுப்புவதற்கான காலம் இன்னும் முடிவடையவில்லை) ரூபா 700000

பதியப்படாத பண்டப்பற்று ரூபா 3000000

தொடக்க கையிருப்புக்கள் ரூபா 8000000

கொள்வனவுகள் ரூபா 24000000

முடிவுகையிருப்புக்கள் (பௌதிக்கணக்கிருப்பின்படி)

- கிரயத்தில் ரூபா 5000000
- தேறக்கூடிய நிகரப் பெறுமதியில் ரூபா 4800000
- உள்வந்த வண்டிக்கூலி ரூபா 400000

31.12.2016 இல் முடிவுற்ற வருடத்துக்கான விற்ற சரக்கின் கிரயமாக அமைவது.

1) ரூபா (000) 24600
2) ரூபா (000) 23900
3) ரூபா (000) 24000
4) ரூபா (000) 23700
5) ரூபா (000) 24400

(…….)

- **வினா இலக்கம் 20,21 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தவும்.**

வரையறுத்த பாபு கம்பனிக்குரிய தகவல்களுள் சில கீழே தரப்பட்டுள்ளன.

	31.03.2017 ரூபா 000	31.03.2016 ரூபா 000
கூறப்பட்ட பங்கு மூலதனம்		
பங்கொன்று 200/= பெறுமதியான சாதாரண பங்குகள்	13000	13000
ஒதுக்கங்கள்		
பொது ஒதுக்கம்	3400	3000
நிறுத்தி வைத்த இலாபம்	4600	2000
நடைமுறையல்லாத பொறுப்பு		
15% தொகுதிகடன்	2000	2000
நடைமுறை பொறுப்புக்கள்		
செலுத்த வேண்டிய வருமான வரி	100	80
கடன் கொடுத்தோர்	140	150

31.03.2017 இல் முடிவடையும் வருடத்தில் செலுத்திய வருமானவரி ரூபா 280000

20) 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்தில் வரிக்கு முன்னரான இலாபம்.

1) ரூபா 1600000
2) ரூபா 2400000
3) ரூபா 2700000
4) ரூபா 3000000
5) ரூபா 3300000

(…….)

21) 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான வட்டி காப்பு விகிதம்.

1) 8 முறை
2) 9 முறை
3) 10 முறை
4) 11 முறை
5) 12 முறை

(…….)

22) ஒரு நிறுவனத்தின் தகவல்களின் நிதிநிலைமை, நிதி செயற்பாடு, உரிமையில் ஏற்படும் மாற்றம் என்பவற்றை முறையே எடுத்து காட்டும் நிதிகூற்றுக்கள்.

1) காசுபாய்ச்சல் கூற்று, வருமானக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று.
2) வருமானக்கூற்று. காசுப்பாய்ச்சல்கூற்று. நிதிநிலைமைக்கூற்று.
3) உரிமை அசைவுக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று. வருமானக்கூற்று.
4) சொத்து அசைவுக்கூற்று, வருமானக்கூற்று. காசுப்பாய்ச்சல் கூற்று.
5) நிதி நிலைமைக்கூற்று, வருமானகூற்று, உரிமை அசைவுக்கூற்று

(…….)

23) இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இன் படி அறிக்கையிடும் காலத்திற்கு பிந்திய நிகழ்வுகளில் சீராக்கம் செய்யக்கூடிய நிகழ்வுகள் எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப்படலாம்.

1) அறிக்கையிடல் காலத்துக்கு பின்னர் எழுந்த நிலைமைகளைக் குறிக்கும் நிகழ்வுகள்.
2) அறிக்கையிடல் தினத்தில் காணப்படும் நிலைமைகளுக்கான சான்றுகளை வழங்கும் நிகழ்வுகள்
3) அறிக்கையிடல் தினத்தின் பின்னர் அதிகரிக்க வேண்டிய தொகைக்கான சிறந்த மதிப்பீட்டினை வழங்கும் நிகழ்வுகள்.
4) அறிக்கையிடல் தினத்திற்குப் பின்னர் எழும் கொடுக்கல் வாங் கல்களிற்கு பொருத்தமான தகவல்களை வழங்கும் நிகழ்வுகள்.
5) அறிக்கையிடல் தினத்திற்குப் பின்னர் எழும் கொடுக்கல் வாங்கல்களிற்கு நம்பகமான தகவல்களை வழங்கும் நிகழ்வுகள்.

(…….)

24) நடைமுறை, நடைமுறையல்லாத சொத்துக்கள் என வகைப்படுத்தப்படுவதற்கான அடிப்படையை வழங்கும் இலங்கை கணக்கீட்டு நியமம் பின்வருவனவற்றுன் எதுவாகும்.

1) இலங்கை கணக்கீட்டு நியமம் 2
2) இலங்கை கணக்கீட்டு நியமம் 1
3) இலங்கை கணக்கீட்டு நியமம் 16
4) இலங்கை கணக்கீட்டு நியமம் 8
5) இலங்கை கணக்கீட்டு நியமம் 37

(…….)

25) கடன்பட்டோர் ஒருவர் தனது மீதியைத்தீர்க்கும் போது கம்பனியொன்றின் நடைமுறைவிகிதம், விரைவு விகிதம், ஆகியவைகளில் ஏற்படும் தாக்கம் யாது?

	நடைமுறை விகிதம்	விரைவு விகிதம்.
1)	குறைவு	குறைவு
2)	அதிகரிப்பு	அதிகரிப்பு
3)	அதிகரிப்பு	குறைவு
4)	குறைவு	அதிகரிப்பு
5)	மாற்றமில்லை	மாற்றமில்லை

(…….)

26) 01.04.2016 இல் ஆரம்பிக்கப்பட்ட கம்பனியின் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் ரூபா 250000 என அறியத்தருகிறது. 31.03.2017 இல் மொத்த சொத்துக்கள், பொறுப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கி இருந்தது.

உபகரணங்கள் (கிரயத்தில் 640000)	600000
சரக்கிருப்பு	200000
காசு	330000
கடன்பட்டோர்	190000
கடன்கொடுத்தோர்	170000

31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்து உருவாக்கப்பட்ட காசு யாது?

1) ரூபா 70000
2) ரூபா 10000
3) ரூபா 270000
4) ரூபா 510000
5) ரூபா 90000

(…….)

27) உற்பத்தியொன்றில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலப்பொருள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

- மாதாந்த நுகர்வு (அலகுகள்) 500
- அலகொன்றின் கிரயம் (ரூபா) 30
- ஒரு அலகுக்கான கட்டளைக்கிரயம் (ரூபா) 40
- அலகொன்றின் வருடாந்த பராமரிப்பு கிரயம் அலகொன்றுக்கான கிரயத்தின் 10% ஆகும். மேற்கூறிய தகவல்களுக்கமைய இம் மூலப்பொருளின் பொருளாதார கட்டளை தொகையையும், ஆண்டுக்காலத்தில் இடப்படவேண்டிய இருப்பு கட்டளைகளின் எண்ணிக்கையையும் காட்டும் தொகுதி முறையே.

	பொருளாதார கட்டளைத் தொகை	கட்டளைகளின் எண்ணிக்கை
1)	283	12
2)	300	20
3)	300	40
4)	400	12
5)	400	15

(…….)

28) நிறுவனமொன்றின் சரக்கிருப்பு உருப்படி தொடர்பான தகவல்கள் வருமாறு.

திகதி	விபரங்கள்	அலகுகள்	அலகுக்கிரயம் (ரூபா)
01.01.2017	மீதி	2000	50
14.01.2017	கொள்வனவுகள்	4000	80
20.01.2017	கொள்வனவுகள்	6000	90
31.01.2017	மீதி	1000	-

ஜனவரி 21 இலிருந்து 31 வரை 11000 அலகுகள் விற்பனை செய்யப்பட்டன. சரக்கிருப்பு வழங்களின் போது முதல் உள்ளே முதல் வெளியே முறை பயன்படுத்தியிருப்பின் 31.01.2017 இல் முடிவுற்ற ஆண்டுக்கான விற்பனைக் கிரயம்.

1) ரூபா 550000
2) ரூபா 860000
3) ரூபா 870000
4) ரூபா 960000
5) ரூபா 990000

(…….)

29) வரையறுக்கப்பட்ட ரூபினி பொதுக்கம்பனியின் 2016 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதிகள் வருமாறு.

கூறப்பட்ட பங்குமூலதனம் 25000 சாதாரணபங்குகள்	2500000
நிறுத்தி வைத்த வருவாய்	1500000

2017 ஏப்ரல் 15 இல் கம்பனி ஒவ்வொரு 5 சாதாரண பங்குகளை உடமையாகக் கொண்டிருப்போருக்கு 01 பங்கினை பங்கொன்று ரூபா 150 விலையில் உரிமை வழங்கீடு செய்து முழுப்பணத்தையும் ஒரே தடவையில் திரட்டி இருந்தது. 2017 யூலை 01 இல் கம்பனி ஒவ்வொரு 10 சாதாரணபங்குகளை உடமையாக கொண்டிருப்போருக்கு 01 பங்கினை பங்கொன்று ரூபா 100 விலையில் உபகாரப்பங்காக வழங்கியது. (உரிமை வழங்கீடு செய்யப்பட்ட பங்குகள் இவ் உபகாரப்பங்கு வழங்கீட்டுக்கு உரித்துடையன அல்ல) மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்குப் பின் சாதாரண பங்கு மூலதனத் கணக்கினதும், நிறுத்தி வைத்த வருவாயினதும் நிலுவைகள் முறையே

	சாதாரண பங்கு மூலதனம்	நிறத்தி வைத்த வருவாய்
1)	ரூபா 3500000	ரூபா 1250000
2)	ரூபா 4000000	ரூபா 1250000
3)	ரூபா 3500000	ரூபா 1750000
4)	ரூபா 3500000	ரூபா 1500000
5)	ரூபா 4000000	ரூபா 1500000

(…….)

30) எல்லைக்கிரயவியல் தொடர்பான சூத்திரங்களில் இரண்டு வருமாறு.

- $\dfrac{\text{நிலையான கிரயம்}}{\text{பங்களிப்பு விற்பனை வீதம்}}$
- $\dfrac{\text{தேறிய இலாபம்}}{\text{பங்களிப்பு விற்பனை வீதம்}}$

இவற்றிலிருந்து பெறப்படுபவை முறையே.

1) இலாப நட்டமற்ற புள்ளி அலகுகளில், பாதுகாப்பு எல்லை அலகுகளில்
2) இலாப நட்டமற்ற புள்ளி பெறுமதியில், பாதுகாப்பு எல்லை பெறுமதியில்
3) மொத்த மாறும் கிரயம், மொத்த நிலையான கிரயம்.
4) பாதுகாப்பு எல்லைபெறுமதியில், இலாபநட்டமற்ற புள்ளி பெறுமதியில்.
5) பாதுகாப்பு எல்லை அலகுகளில், இலாபநட்டமற்ற புள்ளி அலகுகளில்.

(…….)

- **31 தொடக்கம் 50 வரையுமான வினாக்களுக்குச் சுருக்கமான விடையினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

31) கணக்கீட்டு செயன்முறையின் படிமுறைகள் யாவை?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

32) நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல் இரண்டு கணக்கீட்டுச் சமன்பாடு மூலம் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

கொடுக்கல் வாங்கல்	வருமானம்	செலவுகள்	பொறுப்பு	சொத்து
01	+15000		+30000	+18000
02		+ 36000		+7000 - 43000

மேற்படி ஒவ்வொன்றினதும் தாக்கத்துக்கான பொருத்தமான கொடுக்கல் வாங்கல்களைத்தருக?

1)………………………………………………………………………………………

2)………………………………………………………………………………………

33) வணிகமொன்றின் தட்டச்சு இயந்திரம் பழுதுபார்த்தல் செலவு ரூபா 40000 இயந்திர கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்தது. இவ்வழுவின் காரணமாக கீழே தரப்பட்டுள்ள உருப்படிகள் மீது எத்தகைய தாக்கம் ஏற்படும்.

1) தேறிய சொத்து - ……………………………………………

2) தொழிற்படு மூலதனம் - ……………………………………………

3) தேறிய இலாபம் - ……………………………………………

4) நடைமுறையல்லாத சொத்து - ……………………………………………

34) பங்குடமை ஒப்பந்தம் ஒன்றில் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

A - பங்காளரிடையே இலாபநட்டம் சம்மாகப் பகிரப்படல் வேண்டும்.

B - எல்லா பங்காளர்களுக்கும் வருடச் சம்பளம் உரித்தாகும்.

C- மூலதன மீதிக்கு வட்டி பெறுவதற்கு எல்லா பங்காளர்களும் உரித்துடையவர்கள் ஆவர்.

D- மூலதனத்துக்கு மேலாக வழங்கப்படும் கடன்பணத்தற்கு வருடவட்டி உரித்தாகும்.

மேற்கூறிய காரணங்களில் பங்குடமை வியாபார இலாபத்தை நிர்ணயிப்பதில் செல்வாக்கு செலுத்தும் எழுத்தினை அல்லது எழுத்துக்களை குறிப்பிடுக.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

- **35ம், 36ம், 37ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்காக பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

வரையறுத்த துஸ்யந்தன் கம்பனியின் 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான தகவல்கள் வருமாறு.

	(ரூபா 000)
விற்பனைகள்	3000
விற்பனைக்கிரயம்	1500
செயற்பாட்டுச் செலவுகள்	750
மோட்டார் வாகனமொன்றின் விற்பனை மீதான இலாபம்	200
சாதாரணபங்குகளுக்குச் செலுத்திய இடைக்கால பங்குலாபம்	250
அலுவலக உபகரணங்களின் மீள் மதிப்பீட்டு பற்றாக்குறை	300
கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டு மிகை	450

31.03.2016 இல் முடிவடைந்த வருடத்தில் அலுவலக உபகரணத்தை மீள மதிப்பீடு செய்ததில் ரூபா 225000 மிகையொன்று இனங்காணப்பட்டது.
31.03.2017 இல் முடிவடைந்த வருடத்தில் கட்டிடங்கள் முதல் தடவையாக மீள மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

35) 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான இனங்காணப்பட்ட மொத்த வருமானம், மொத்த செலவுகள் எவை?

மொத்த வருமானம் : ………………………………………………………………

மொத்தச் செலவுகள் : ………………………………………………………………

36) 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான இனங்காணப்பட்ட இலாபம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் எவை?

இலாபம் : ………………………………………………………………..

ஏனைய முற்றுமடங்கிய வருமானம் :…………………………………………………………..

37) 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் மற்றும் நிறுத்தி வைத்த வருவாய்கள் யாவை?

மொத்த முற்றுமடங்கிய வருமானம் : ………………………………………………..

நிறுத்தி வைத்த வருவாய் : ……………………………………………….

38) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களினூடாக வங்கிமீதியில் அதிகரிப்பு அல்லது குறைவு ஏற்படுகின்றதா என்பதனைக் குறிப்பிட்டுக்காட்டவும்.

கொடுக்கல் வாங்கல்கள்	வணிகத்தின் வங்கி கணக்கு மீதி
1. கடன்பட்டோர் ஒருவர் வணிகத்தின் வங்கியிலுள்ள நடைமுறைக்கணக்கில் காசோலை ஒன்றை வைப்பிலிடுதல்	
2. வங்கியானது காசோலைப் புத்தகக் கட்டணத்தை அறவிடல்	
3. வணிகத்தின் மின்சாரக்கட்டணமானது காசோலை மூலம் செலுத்தப்படல்	
4. வங்கியில் வைப்பிலிடப்பட்ட காசோலையொன்று மறுக்கப்படல்.	

39) உற்பத்தி நிறுவனமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தொடர்பான 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் வருமாறு.

மொத்த உற்பத்திக்கிரயம் ரூபா 400000

குறைவேலை இருப்பில் குறைவு 31.03.2017 இல் ரூபா 45000

பயன்படுத்திய மூலப்பொருட்கிரயம் ரூபா 250000

உற்பத்தி மேந்தலைக்கிரயத்தில் 50% நேர்கூலிக்கிரயமாகும். 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முதன்மைக்கிரயம், உற்பத்தி மேந்தலைக்கிரயம் ஆகியவற்றைக் துணிக.

முதன்மை கிரயம் : ………………………………………………………

உற்பத்தி மேந்தலைக்கிரயம் : ………………………………………………………

40) வரையறுக்கப்பட்ட தாரங்கா கம்பனியின் 2016 ம் ஆண்டுக்கான தகவல்கள் வருமாறு.

	01.01.2016	31.12.2016
கடன்பட்டோர்	75000	125000
இருப்பு	25000	50000

2016ம் ஆண்டு விற்பனையில் இருந்து பெற்ற காசு ரூபா 500000

2016ம் ஆண்டில் கொள்வனவுகள் 375000

மொத்த இலாப வீதம் கிரயத்தில் 25%

எனின் குறித்த ஆண்டில் ஏற்பட்ட தீ விபத்தில் அழிவுற்ற சரக்கின் கிரயம் யாது?

……………………………………………………………………………………..

41) குறித்த கணக்காண்டு காலப்பகுதியில் கடன்பட்டோரில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 30000 ஆகும். குறித்த கணக்காண்டில் மொத்த விற்பனை ரூ 600000 ஆகும். மொத்த விற்பனையில் 75% கடனடிப்படையிலானதாகும். கடன்பட்டோருக்கு கழிவுகள் அனுமதிக்கப்படவும் இல்லை அறிவிடமுடியாத கடன் ஏதுவும் ஏற்படவில்லை எனில் குறித்த கணக்காண்டில் கடன்பட்டோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட காசு எவ்வளவு?

42) கிரயமுகாமை கணக்கீடு, நிதி கணக்கீடு தொடர்பாக பின்வரும் அட்டவணையினைப் பூர்த்தி செய்க.

	கிரய முகாமைக்கணக்கீடு	நிதிக்கணக்கீடு
அறிக்கையிடும் காலம்		
சட்டதேவைப்பாடு		
தகவல்களைப் பயன்படுத்தும் தரப்பினர்.		

43) கலா நிறுவனத்தின் 2016 ற்கான விற்பனை ரூபா 2400000 ஆகும் கொள்விலையில் மொத்த இலாப வீதம் 20% ஆண்டுக்கான செலவுகள் 320000 ஆகும்.

தேறிய இலாப வீதம் : ……………………………………………………………..

விற்பனைக்கிரயம் : ……………………………………………………………..

44) இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் படி நிறுவனமொன்றானது கணக்கீட்டு கொள்கையை இரண்டு சூழ்நிலைகளில் மாற்றிக்கொள்ளமுடியும் அவ் இரு சூழ்நிலைகளையுமம் குறிப்பிடுக.

1) ………………………………………………………………………………

2) ………………………………………………………………………………

45) தொழிற்சாலையொன்றில் பணிபுரியும் இயந்திர இயக்குனர் ஒருவருக்கு மணித்தியாலம் ஒன்றுக்கு ரூபா 250 செலுத்தப்படுவதுடன் மேலதிக நேர மணித்தியாலம் ஒன்றுக்கு ரூபா 300 வீதம் செலுத்தப்படுகிறது. வாரமொன்றுக்கான சாதாரண வேலை மணித்தியாலம் 40 ஆகும். இந்த இயக்குனர் 2017 மார்ச் மாதத்தில் முதல் வாரத்தில் 45 மணித்தியாலங்கள் வேலை செய்துள்ளார் ஆயின் அவ்வாரத்துக்கான மொத்த கூலியாது?

…………………………………………………………………………………..

46) விற்பனைக்குரிய நியமத்தினை அடையாத பொருட்களின் இருப்பினை எவ்வாறு பெயரிடுவர்?

…………………………………………………………………………………..

47) ராதிகா நிறுவனத்தின் நிதி வருடம் 31.12.2016 இல் முடிவடைகின்றது. இந்நிறுவனம் 30.06.2016 இல் புதிய பொறி ஒன்றை ரூபா 840000 ற்கு கொள்வனவு செய்தது. இப்பொறி தொடர்பாக எழுந்த ஏனைய கிரயங்கள் வருமாறு.

இறக்குமதித்தீர்வை	ரூபா	100000
பொருத்துதல் செலவு	ரூபா	120000
பராமரிப்புச் செலவு	ரூபா	20000

இப்பொறியின் ஆயுட்காலம் 10 வருடங்களும் எஞ்சிய பெறுமதி ரூபா60000 உம் காணப்பட்டது. 31.12.2016 இல் பொறியின் கிரயமும் பெறுமானத்தேய்வு தொகையும்.

பொறியின் கிரயம் : ……………………………………………………

பெறுமானத்தேய்வுத் தொகை : ……………………………………………………

48) சம்பளப்பட்டியல் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் நான்கு மூல ஆவணங்களைத் தருக?

………………………………………………………………………………………..

49) ஒவ்வொரு செயற்பாட்டு மட்டத்திலும் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளும் அலகுக் கிரயமும் தரப்பட்டுள்ளது.

மட்டம்	அலகுகளின் எண்ணிக்கை	அலகுக்கிரயம்.
1	1000	50 ரூபா
2	1500	40 ரூபா

மொத்த நிலையான கிரயம் யாது? ……………………………………………………

50) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும், பிழையாயின் (×) எனவும் வினாவுக்க எதிராக காணப்படும் கூட்டினுள் அடையாளப்படுத்துக.

1) முதலீட்டுத் தீர்மானம் குறுங்காலத் தீர்மானம் எடுத்தலுக்கு பயன்படுத்தப்படுகின்ற நுட்ப முறையாகும். (   )
2) ஆழ்ந்த செலவு என்பது குறிப்பிட்ட செயற்திட்டத்துக்கு முன்னர் ஏற்கனவே செய்யப்பட்ட செலவாகும். இது செயற்றிட்ட மதிப்பாய்வின் போது கவனத்தில் கொள்ளப்படுவதில்லை (   )
3) பணத்தின் எதிர்காலப் பெறுமதியின் இற்றைப் பெறுமதியை கண்டுகொள்ளல் கழிவிடல் எனப்படும் (   )
4) திரும்ப செலுத்தும் காலமுறையில் குறைந்த காலத்துடனான செயற்றிட்டமும், தேறிய இற்றைப் பெறுமதி முறையில் கழிவு செய்யப்படட தேறிய காசுப்பாய்ச்சல் நேர்கணியமாகவும் அதிக பெறுமானம் கொண்டதுமான செயற்றிட்டமும், கணக்கீட்டு வருவாய் வீதத்தில் அதிக கணக்கீட்டு வருவாய் வீதம்கொண்ட செயற்திட்டமும் தெரிவு செய்யப்படும் (   )

வடமாகாண கல்வித் திணைக்களம்
மாதிரி வினாத்தாள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப்பரீட்சை 2017
General Certificate of Education (Adv. level) Examination 2017

கணக்கீடு II Accounting II	33	T	II	மூன்று மணித்தியாலம் ThreeHours

அறிவுறுத்தல்கள்.
- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஆறு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்குமான விடையும் புதியதொரு தாளில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்
- உரிய செய்முறைகள் விடைத்தாள்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.

01) வரையறுத்த கோகுலன் பொதுக்கம்பனியின் 31.03.2017 இல் உள்ளவாறான பரீட்சைமீதி வருமாறு.

விபரம்	வரவு ரூபா 000	செலவு ரூபா 000
கொள்வனவுகள்	7500	
விற்பனைகள்		17100
10% வங்கிகடன்		5700
சம்பளங்கள்	1500	
செலுத்த வேண்டிய ஊழியர் சேமஇலாபநிதியம் (ஊழியர் பங்களிப்பு 10%)		150
வாடகை	960	
மின்சாரம்	150	
விளம்பரம்	95	
01.04.2016 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	30400	
01.04.2016 இல் உள்ளவாறான பெறுமானத்தேய்வு ஏற்பாடு ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்		9280
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் - அலுவலக உபகரணம்		1200
குத்தகை கடன்கொடுத்தோர்		4706
வியாபார வருமதியாளர்கள்	4000	
வங்கியில் உள்ள காசு	550	
நடைமுறை ஆண்டில் முதல் மூன்று காலாண்டுக்காக செலுத்தப்பட்ட வருமானவரி	290	
பெறுமதிசேர் வரி சேகரிப்புகள்		1320
பெறுமதி சேர்வரி கொடுப்பனவுகள்	700	
கூறப்பட்ட சாதாரணபங்கு மூலதனம்		4000

01.04.2016 இல் நிறுத்தி வைத்த வருவாய்கள்		2569
01.04.2016 இல் இருப்பு	1500	
பொது ஒதுக்கம்		1300
01.04.2016 இல் ஐயக்கடன் ஏற்பாடு		320
	47645	**47645**

மேலதிக தகவல்கள்

31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வருவனவற்றுக்கான சீராக்கம் செய்யப்படல் வேண்டும்.

1) 2017 பெப்ரவரி, மார்ச் மாதத்துக்கான மின்சார கட்டணம் மொத்தமாக ரூபா 30000 இன்னும் செலுத்தப்படவில்லை.
2) 01.04.2016 இல் இரண்டு வருடங்களுக்கான வாடகை செலுத்தப்பட்டுள்ளது. இத்தொகை முழுவதும் நடைமுறை ஆண்டுக்கான வாடகையாக பதியப்பட்டுள்ளது.
3) 31.03.2017 இல் சரக்கிருப்பின் கிரயம் மற்றும் இதன் தேறிய தேறத்தக்க பெறுமதி என்பன முறையே ரூபா 1200000, 1400000 ஆக இருந்தது. எனினும் முழுச்சரக்கிருப்பும் ரூபா 1100000 இற்கு 20.04.2017 இல் விற்பனை செய்யப்பட்டது. இயக்குனர்கள் 15.05.2017 இல் இக்கம்பனியின் நிதி கூற்றுக்களை அங்கீகரித்தனர்.
4) ஆதனம், பொறி, உபகரணம் மற்றும் ஏனைய விபரங்கள் ஆகியவற்றின் உள்ளடக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

சொத்து	(ரூபா 000)		வருடங்கள்
	கிரயம் 01.04.2016 இல் உள்ளவாறு	திரண்டபெறுமானத் தேய்வு 01.04.2016 இல் உள்ளவாறு	பயன்தரு ஆயுட்காலம்.
கட்டிடடம்	16000	4000	20
மோட்டார் வாகனம் (குத்தகை அடிப்படையில்)	12000	4800	5
அலுவலக உபகரணம்	2400	480	5
	30400	**9280**	

இவற்றுக்கு நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்விடப்படுகிறது.

5) கட்டிடம், அலுவலக உபகரணம் ஆகியன 31.03.2017 இல் அதன் நியாய விலைகளில் முறையே ரூபா 12800000, ரூபா 1200000 என மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.
6) மோட்டார் வாகனங்கள் 01.04.2014 இல் குத்தனையடிப்படையில் பெறப்பட்டது வருடாந்த குத்தகை கட்டணம் ரூபா 3166000 ஆகும். குத்தகை காலம் ஐந்து வருடங்கள் ஆகும். நடைமுறை ஆண்டுக்கான குத்தகை கட்டணம்

மறுபக்கம் பார்க்கவும்

செலுத்தப்பட்டதுடன் இவை முழுமையாக குத்தகை கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பில் வேறு எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

குத்தகை வட்டி தொடர்பான விபரங்கள் வருமாறு

வருடம்	வட்டி (ரூபா 000)
2014/15	1200
2015/16	1004
2016/17	788
2017/18	550
2018/19	288

7) நிதி வருடத்துக்கான ஊழியர் சேமஇலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கான கம்பனியின் பங்களிப்பு இது வரை வழங்கப்படவில்லை ஊழியர் சேமஇலாப நிதியம் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் 15%, 3% இனை கம்பனி பங்களிப்பு செய்கின்றது.

8) வருடமுடிவில் ரூபா 400000 இனை அறவிட முடியாத கடனாக பதிவழிக்கவும, வியாபார வருமதிகளின் மிகுதி தொகைக்கு 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

9) நடைமுறை ஆண்டுக்கான வருமானவரியானது வரிக்கு முன்னரான இலாபத்தில் 1/3 பங்கு என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

10) 31.03.2017 இல் கம்பனியானது பொது ஒதுக்கங்களுக்கு ரூபா100000 நிறுத்தி வைத்த வருவாய்களில் இருந்து மாற்றியுள்ளது. மேலும் இயக்குனர்கள் ரூபா 300000 இணை கம்பனியின் சாதாரண பங்குதாரர்களுக்கான பங்குலாபமாக முன்மொழிந்துள்ளனர்.

11) 31.03.2017 இல் கம்பனியானது பொதுஒதுக்கங்களை மூலதனமாக்குவதன் மூலம் தற்போதுள்ள பங்குதாரர்களுக்கு 40000 சாதாரணபங்குகளை பங்கொன்று ரூபா 20 வீதம் வழங்கியது. இது தொடர்பான பதிவுகளும் செய்யப்படவில்லை

வேண்டப்படுவது :

இலங்கை கணக்கீட்டு நியமம் -1 இன்படி வரையறுத்த கோகுலன் பொதுக்கம்பனியின் பிரசுரிப்பதற்குத் தேவையான பின்வரும் நிதி கூற்றுக்கள் (குறிப்புகள் உட்பட)

1) **31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப/ நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று.**
2) **31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமையாண்மை மாற்றல்கூற்று.**
3) **31.03.2-017 இலுள்ளவாறான நிதிநிலைமைகூற்று.** (20 புள்ளிகள்)

02) அ) இலாப நட்டங்கள் 2:3 ஆகப் பகிரும் அன்பு, அறிவு ஆகியோர் நிறுவனமொன்றின் பங்காளராவர். 01.04.2016 இல் பண்பு என்பவர் பங்காளராகக் சேர்க்கப்பட்டுள்ளார். திருத்தி அமைக்கப்பட்ட பங்குடமை ஒப்பந்தம் பின்வருமாறு இருந்தது.

- இலாபநட்டங்கள் அன்பு, அறிவு, பண்பு ஆகியோரிமையே 2:2:1 என்ற விகிதத்தில் பகிரப்படல் வேண்டும்.
- பண்பினை பங்காளராகச் சேர்த்து கொள்ளும் பொருட்டு பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 150000 என மதிப்பிடப்பட்டது. இதற்கென தனியான கணக்கு திறக்காது மூலதனக்கணக்கின் ஊடாக சீராக்க பங்காளர் முடிவுசெய்தனர்.
- பங்காளர் மூலதன நிலுவைக்கு ஆண்டுக்கு 10% வட்டி பெறுவதற்கு உரித்துடையவர்கள்.
- பங்காளர் மாதாந்த சம்பளமாக முறையே ரூபா 1500, 3000, 2000 தொகைகளைப் பெற முடியும்.
- பண்பு பங்குடமையின் மூலதனமாக ரூபா 50000 காசினையும், ரூபா 200000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்றையும் கொண்டு வந்தார். இவை தொடர்பான பதிவுகள் எவையும் ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

31.03.2017 இல் பரீட்சை மீதி பின்வருமாறு காணப்பட்டது.

விபரம்	தொகை (ரூபா 000)	தொகை (ரூபா 000)
01.04.2016 மூலதனக்கணக்கு அன்பு		150
அறிவு		100
01.04.2016 நடைமுறைக்கணக்கு அன்பு		43
அறிவு		56
காசும், வங்கியும் (மேலதிகப்பற்று)		44
ஆதனம், பொறி உபகரணம் - கிரயம்	1000	
01.04.2016வரை திரண்ட பெறுமாகத்தேய்வு ஏற்பாடு		70
வங்கி கடன்		262
கடன்படுனர்	300	
31.03.2017 இல் இருப்பு	71	
கடன்கொடுத்தோர்		170
விற்பனை		1800
விற்பனை பங்கீட்டுச்செலவு	176	
நிலைய நிர்வாகச் செலவு	150	
விற்பனைக் கிரயம்	920	
ஏனைய நிதிச்செலவு	78	
	2695	**2695**

மேலதிக தகவல்கள்.

1) 31.03.2017 இல் கையிருப்புக்களை மதிப்பீடும் போது ரூபா 25000 பெறுமதியான பண்டங்கள் வழிச்சரக்காக காணப்பட்டமையால் அதனைக் கருத்தில் கொள்ளவில்லை.
2) ஆதனம் பொறி உபகரணங்கள் கிரயத்தில் 10% பெறுமானத்தேய்விடுக நிலத்தின் பெறுமதி ரூபா 500000 ஆகும்.
3) கடன்கொள்வனவு ரூபா 10000 ஏடுகளில் தவறவிடப்பட்டிருந்தது.
4) 2017 மார்ச் 31 இல் அட்டுறு செலவினங்களாக பின்வருவன காணப்பட்டன.
   மின் கட்டணம் ரூபா 15000
   இறைவரி ரூபா 10000
   வங்கிகடன் வட்டி ரூபா 12000
5) இவ்வருடம் தொடக்கம் ஆண்டிறுதி கடன்பட்டோரில் 2% த்தை ஐயக்கடன் ஏற்பாடு செய்வதென பங்காளர் முடிவு செய்துள்ளனர்.

வேண்டப்படுவது :

1) 31 மார்ச் 2017 இல் முடிவுற்ற ஆண்டுக்கான பங்குடமையின் வருமானக்கூற்று.

2) 31 மார்ச் 2017 இல் முடிவுற்ற ஆண்டுக்கான பங்காளர் மூலதன கணக்கும், நடைமுறைக்கணக்கும்.

3) 31 மார்ச் 2017 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று.

(10 புள்ளிகள்)

ஆ)

வரையறுக்கப்பட்ட ஆனந் கம்பனியானது A,B ஆகிய இரு பொருட்களை உற்பத்தி செய்வதற்காக இணைத்தல் முடிவுறுத்தல் என்றும் இரு உற்பத்திப் பகுதிகளையும் தொழில்நுட்பம் என்றும் சேவைப்பகுதியினையும் கொண்டுள்ளது.

உற்பத்தி பொருள் A உற்பத்திப் பொருள் B என்பவற்றை உற்பத்தி செய்வதற்கு அலகொன்றுக்கு ஏற்பட்ட நேர்க்கிரயங்களின் விபரம் வருமாறு.

நேர்க்கிரயம்	உற்பத்திப் பொருள் A	உற்பத்திப் பொருள் B
நேர்மூலப்பொருள்	450	250
நேர்க்கூலி	350	150
நேர்ச்செலவு	நேர்மூலப்பொருட் செலவில் 50%	நேர்க்கூலியில் 1/3 பங்கு

கம்பனியின் பதிவேட்டில் இருந்து எடுக்கப்பட்ட இப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்பட்ட மேந்தலைச் செலவு கிரயங்களின் விபரம் வருமாறு.

நேரில் கூலி	-	இணைத்தல் பகுதி	28800
நேரில் கூலி	-	முடிவுறுத்தல் பகுதி	17200
கட்டிட பராமரிப்பு			90000
தரக்கட்டுப்பாடு			60000
மின்சாரம்			120000
தொலைபேசி			60000

மேந்தலைப் பகிர்வுக்கான அடிப்படைகள் வருமாறு.

விபரம்	உற்பத்திப்பகுதி		சேவைப்பகுதி
	இணைத்தல்	முடிவுறுத்தல்	தொழில்நுட்பம
தளபரப்பு சதுரமீற்றர்	1000	1400	600
தரக்கட்டுப்பாட்டு சோதனை மணித்தியாலம்	20	10	-
தொலைபேசி அழைப்பு அலகுகள்	60	40	20
சேவைப்பகுதியின் பகிர்வு	60%	40%	-

ஏனைய தகவல்கள்

1) உற்பத்திப் பகுதிகளின் பாவனையில் உள்ள மணித்தியாலங்களின் விபரம் வருமாறு.

மணித்தியாலங்கள்	இணைத்தல் பகுதி	முடிவுறுத்தல் பகுதி
இயந்திர மணித்தியாலங்கள்	2000	1800
ஊழிய மணித்தியாலங்கள்	1500	1600

இணைத்தல் பகுதி, முடிவுறுத்தல் பகுதி ஆகியவற்றின் மேந்தலைகள் முறையே இயந்திர மணித்தியாலங்கள், உழியர் மணித்தியாலங்கள் என்ற அடிப்படையில் உறிஞ்சுதல் கம்பனியின் கொள்கையாக உள்ளது.

2) அலகொன்றுக்கு தேவைப்படும் இயந்திர மணித்தியாலங்கள், ஊழிய மணித்தியாலங்களின் விபரம் வருமாறு.

மணித்தியாலங்கள்	உற்பத்திப்பொருள் A	உற்பத்திப் பொருள் B
இயந்திர மணித்தியாலங்கள்	2 மணித்தியாலம்	2.5 மணித்தியாலம்
ஊழிய மணித்தியாலங்கள்	3 மணித்தியாலம்	1 மணித்தியாலம்

வேண்டப்படுவன :

1) பகிர்வினைத் தெளிவாகக் காட்டும் பகிர்வுக்கூற்று.

2) இணைத்தல், முடிவுறுத்தல் பகுதிகளின் மேந்தலை உறிஞ்சுதல்கள்.

3) உற்பத்திப் பொருள் A, உற்பத்திப் பொருள் B க்கான மொத்த அலகுக்கிரயம்.

4) உற்பத்திப் பொருள் A 10% இலாபத்துடனும் உற்பத்திப் பொருள் B 15% இலாபத்துடனும் விற்பனை செய்யப்படின் விற்பனை விலைகள்.

(10 புள்ளிகள்)

03) அ)

சங்கர் தனது சொந்த சேமிப்புக்களைப் பயன்படுத்தி ரூபா 800000 ஐ முதலீடு செய்து 01.01.2017 இல் வியாபாரமொன்றை ஆரம்பித்தார். மேலும் அவர் ரூபா 240000 மதிப்பீடு செய்யப்பட்ட தனது மோட்டார் வாகனத்தையும் வியாபாரத்துக்காகப் பயன்படுத்தினார். 2017 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற சில கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பயன்படுத்தி பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளன.

(எல்லா பெறுமதிகளும் ரூபா 000 இல் ஆகும்)

கொடுக்கல் வாங்கல் இலக்கம்	சொத்துக்கள்				பொறுப்புக்கள்	உரிமையாண்மை
	தளபாடம்	சரக்கிருப்பு	கடன்பட்டோர்	வங்கி		
01		+ 400		-400		
02		+ 360			+360	
03	+360			+360		
04		- 80		+100		+ 20
05				-76	-80	+4
06		-120	+200			+80
07			-120	+114		-6
08				-20		-20

மேலதிக தகவல்கள்.

1) வியாபாரத்தின் எல்லா கொடுக்கல் வாங்கல்களும் வங்கி கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.
2) சங்கரின் மகளின் பாடசாலைக் கட்டணத்தை செலுத்துவதற்காக வழங்கப்பட்ட ரூபா 20000 ற்கான காசோலை தொடர்பாக பதிவுகள் இடம்பெறவில்லை. (இத்தொகை மட்டுமே இம்மாதத்துக்கான பற்று ஆகும்)
3) 2017 ஜனவரி மாதத்துக்கான செலுத்த வேண்டிய இறைவரி ரூபா 10000 ஆகும்.
4) வியாபாரத்தின் ஆதனம் பொறி உபகரணங்கள் என்பன நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத் தேய்விடல் வேண்டும்.

வேண்டப்படுவன.

1) இலக்கம் 1 இலிருந்து 8 வரைக்குமான கொடுக்கல் வாங்கல்களை விபரித்தல்.
2) தேறிய சொத்து அடிப்படையில் 2017 ஜனவரி மாதத்துக்கான வியாபாரத்தின் இலாபம் / நட்டம்.

(08 புள்ளிகள்)

ஆ)

வரையறுத்த ரட்ணம் பொதுக்கம்பனி 2017 மார்ச் 31 இல் உடமையாக இருந்த மோட்டார் வாகனம் தொடர்பான தகவல் வருமாறு.

வாகனம்	கொள்வனவுத் திகதி	கிரயம் (000 ரூபா)	எஞ்சிய பெறுமதி (000 ரூபா)	மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம்.
மோட்டார் வான்	2014.04.01	3600	400	8
லொறி	2014.04.01	6000	600	6
மோட்டார் கார்	2016.04.01	8000	1000	7

மேலதிக தகவல்

1) 2017 மார்ச் 31 இல் மோட்டார் வான் ரூபா 1300000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.
2) 2016 ஏப்ரல் 01 இல் லொறியின் ஆயுள் மேலும் இரண்டு வருடங்கள் அதிகரிக்கப்படுமென கணிக்கப்பட்டுள்ளது.
3) மோட்டார் கார் 2016 ஏப்ரல் 01 இல் 5 ஆண்டுகால நிதிக்குத்தகையின் உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டது.
4) அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் நேர்கோட்டு முறையில் தேய்விடப்படுகின்றன.

வேண்டப்படுவது : **31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றில் இடம்பெற வேண்டிய பெறுமானத்தேய்வு, வான் விற்பனையிலான இலாபம்/நட்டம்.**

(07 புள்ளிகள்)

04)

அ)

2016 டிசம்பர் 31 இல் இருந்தபடி வரையறுத்த சிரோமி கம்பனியின் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கில் காணப்பட்ட மீதிகள் வருமாறு.

2016 ஜனவரி 01 இல் செலவு மீதி	ரூபா 71000
2016 ஜனவரி 01 இல் வரவு மீதி	ரூபா 1000
கடன்கொள்வனவுகள்	ரூபா 661000
பெற்றகழிவுகள்	ரூபா 3000
கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு	ரூபா 565000
கொள்வனவுத் திரும்பல்கள்	ரூபா 5500
கடன் கொடுத்தோர் மீளளிப்பு செய்த தொகை	ரூபா 5000
விற்பனைப் பேரேட்டில் இருந்து மாற்றப்பட்ட மீதிகள்	ரூபா 1700
2016 டிசம்பர் 31 இல் வரவுமீதி	ரூபா 1300

2016 டிசம்பர் 31 இல் இருந்து கட்டுப்பாட்டு கணக்கு மீதி கொள்வனவு பேரேட்டினது பட்டோலை மீதிகளின் நிரலின் மொத்த தொகையான ரூபா 165700 உடன் இணங்கவில்லை.

பிற்பட்ட பரிசீலனை பின்வரும் வழுக்களை வெளிப்படுத்தியது.

1) கொள்வனவுக் குறிப்பேடு ரூபா 1000 என்னும் தொகையால் குறைத்து கூட்டப்பட்டிருந்தது.
2) ரூபா 510 ஆன செலவு மீதியொன்று கடன்கொடுத்தோர் மீதிகளின் நிரலில் இருந்து தவறவிடப்பட்டிருந்தது.
3) கிடைத்த கழிவீடான ரூபா 700 என்றும் தொகை காசேட்டிலும், கிடைத்த கழிவீட்டுக் கணக்கிலும் சரியாகப் பதியப்பட்டிருந்தது. ஆனால் இது உரிய நபரின் கணக்கில் இடம்பெறவில்லை.
4) கொள்வனவுக் குறிப்பேட்டிலான ரூபா 1560 ஆன உருப்படியொன்று கடன்கொடுத்தோர் பேரேட்டில் நபர் கணக்கில் ரூபா 1740 எனப்பதியப்பட்டிருந்தது.
5) வழங்குனர் ஒருவருக்கு திருப்பி அனுப்பப்பட்ட ரூபா 170 கிரயத்தை கொண்ட பண்டங்கள் கடன்கொடுத்தோர் கணக்கில் சரியாகப் பதியப்பட்டது. ஆனால் அது கட்டுப்பாட்டு கணக்கில் ரூபா 3700 ஆகப்பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவன :

1. **மேற்போர்ந்த வழுக்களைத்திருத்துவதற்கு முன் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு.**
2. **மேலே (1) இலான மீதிக்குரிய செம்மையாக்கங்களைக் காட்டும் கட்டுப்பாட்டு கணக்கு.**
3. **கட்டுப்பாட்டு கணக்கிலான திருத்தப்பட்ட மீதியைப் பட்டோலை மீதிகளது நிரலின் மொத்த தொகையுடன் இணக்கம் செய்யும் கூற்று.**

(10 புள்ளிகள்)

ஆ)

பின்வரும் தகவல்கள் கம்பனியொன்று பயன்படுத்தும் மூலப்பொருள் ஒன்றுடன் தொடர்புடையவை ஆகும்.

1) 2017 மார்ச் மாதத்துக்கான இருப்பு பேரேட்டின் சுருக்கம்.

   01.03.2017 மீதி 6000 அலகுகள் அலகொன்றின் விலை 12/=

   10.03.2017 கொள்வனவுகள் 12000 அலகுகள் அலகொன்றின் விலை 15/=

   20.03.2017 இல் வழங்கள் 10500 அலகுகள்

   29.03.2017 இல் கொள்வனவுகள் 12000 அலகுகள் அலகொன்றின் விலை 20/=

2) கம்பனி சரக்கிருப்பு வழங்கல்களை விலையிடுவதற்கு நிறையளிக்கப்பட்ட சராசரி முறையைப் பயன்படுத்துகிறது.

3) ஏனைய தகவல்கள்.

ஆகக்கூடிய பாவனை	4500 அலகுகள்.
சராசரி பாவனை	3000 அலகுகள்.
ஆகக் குறைந்த விநியோக காலம்	02 மாதங்கள்.
சராசரி விநியோக காலம்	03 மாதங்கள்.

வேண்டப்படுவது.

1) **31.03.2017 இல் இருப்பின் பெறுமதி.**
2) **31.03.2017 இல் வழங்கப்பட் இருப்பின் பெறுமதி.**
3) **மறுகட்டளைத் தொகை.**
4) **மறுகட்டளை மட்டம்.**
5) **ஆகக் கூடிய இருப்புமட்டம்.**
6) **ஆகக் குறைந்த இருப்பு மட்டம்.**

(05 புள்ளிகள்)

05) வரையறுக்கப்பட்ட தயா கம்பனியின் இரு வருடங்களுக்கான நிதி நிலைமைக் கூற்றுக்கள் வருமாறு.

விபரம்	31.03.2016	31.03.2017
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்	300000	465000
பொது ஒதுக்கம்	30000	45000
நிறுத்தி வைத்த இலாப நட்டக்கணக்கு	15000	22500
நடைமுறையல்லாத பொறுப்புககள்		
20% தொகுதிகடன்	120000	37500
நடைமுறை பொறுப்புக்கள்		
வரி ஏற்பாடு	15000	30000
கடன்கொடுத்தோர்	7500	31500
அட்டுறு செயற்பாட்டுச் செலவுகள்	15000	7500
மொத்த பொறுப்புக்கள்	**502500**	**639000**
நடைமுறையல்லாத சொத்துக்கள்		
காணிகட்டிடம்	150000	150000
பொறி இயந்திரம்	120000	165000
மோட்டார் வாகனம்	90000	78000
முதலீடுகள்	75000	150000
நடைமுறை சொத்துக்கள்		
கையிருப்பு	12000	36000
கடன்பட்டோர்	31500	48000
காசும் வங்கியும்	24000	12000
மொத்த சொத்துக்கள்	**502500**	**639000**

வரையறுக்கப்பட்ட தயா கம்பனியின் 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான வருமானக்கூற்று.

விபரம்	'000'	'000'
விற்பனை		450000
(-) விற்பனைக்கிரயம்		(270000)
மொத்த இலாபம்		180000
(-) செயற்பாட்டுச் செலவுகள்	40500	
பொறி இயந்திரப் பெறுமானத்தேய்வு	15000	
கட்டிட பெறுமானத்தேய்வு	12000	
வட்டி	7500	(75000)
வரிக்கு முன் இலாபம்		105000
(-) வருமான வரி		(30000)
ஆண்டுக்கான இலாபம்		75000

ஆண்டுக்கான இலாப பகிர்வு கூற்று

விபரம்	'000'	'000'
ஆண்டுக்கான இலாபம்		75000
(-) பொது ஒதுக்கத்துக்கு மாற்றம்	15000	
செலுத்திய பங்குஇலாபம்	52500	(67500)
நிறுத்தி வைத்த இலாபம்		7500

பின்வருவனவற்றைத் தயாரிக்குமாறு நீர் வேண்டப்படுகிறீர்.

1. **நேரில் முறையில் செயற்பாட்டு நடவடிக்கையிலான காசு (31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கு)**
2. **நேர்முறையில் காசுப்பாய்ச்சல் கூற்று (31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கு)**
3. **31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் விகிதங்களை கணிக்குக.**

- **தேறிய இலாப வீதம்.**
- **நடைமுறை விகிதம்.**
- **சரக்கிருப்பு புரள்வு விகிதம்.**
- **வட்டி பாதுகாப்பு விகிதம்.**
- **கடன் உரிமை விகிதம்.**

(15 புள்ளிகள்)

06) அ)

விதுசன், தனுசன், மதுசன் ஆகியோர் கம்பனியொன்றின் மூன்று ஊழியர்கள். இவர்கள் சம்பளம் தொடர்பான பின்வரும் தகவல்கள் 2017 மார்ச் மாதத்திற்காகத் தரப்பட்டுள்ளது.

1) வேலை செய்த மணித்தியாலங்கள்.

ஊழியர் பெயர்	வார நாட்கள்	வார இறுதி நாட்கள்
விதுசன்	40	-
தனுசன்	40	10
மதுசன்	40	20

2) மணித்தியால வீதங்கள்
வார நாட்களுக்கான வீதம் - மணித்தியாலத்தக்கு ரூபா 200 வீதம்.
வார இறுதி நாட்களுக்கான மேலதிக நேர வீதம் - வார நாட்களின் வீதத்தின் 1 ½ மடங்கு.

3) வேலை கொள்வோர், ஊழியர் என்போரால் ஊழியர் சேம இலாப நிதி பங்களிப்புகள் முறையே 15%, 10% ஆகும். வேலை கொள்வோர் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்பு 3% ஆகும். ஊழியர் சேம இலாபநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றை கணிப்பிடுவதற்கு மேலதிக நேர கொடுப்பனவுகள் உரித்துடையன அல்ல.

4) கழிப்பனவுகள் / அறவீடுகள்.

- நலன்புரிச்சங்கத்துக்கு ஊழியர்களின் மாதாந்த பங்களிப்பு ரூபா 200 ஆகும். (ஒருவருக்கு)
- மதுசனின் மாதாந்த கடன் தவணைக் கொடுப்பனவு ரூபா 4000 ஆகும்.

வேண்டப்படுவது :

1) **2017 மார்ச் மாதத்துக்கான சம்பளப்பட்டியல்.**
2) **2017 மார்ச் மாதத்துக்கான சம்பளக்கட்டுப்பாட்டு கணக்கீடு செலுத்த வேண்டிய ஊழியர் சேமஇலாபநிதி கணக்கு, ஊழியர் நம்பிக்கை நிதியக்கணக்கு.**
3) **2017 மார்ச் மாதத்துக்கான ஊழியர் தொடர்பான மொத்த செலவுகள்.**

(08 புள்ளிகள்)

ஆ) பின்வரும் தகவல்கள் உள்ளூர் உற்பத்தி கம்பனியிலிருந்து பெறப்பட்டவையாகும்.

அலகுக்கான விற்பை விலை	ரூபா	300
அலக்கான மாறும் கிரயம்	ரூபா	180
நிலையான செலவு	ரூபா	60000
தற்போதைய உற்பத்தி அலகுகள்	1200	

பின்வருவனவற்றை கணிப்பிடுக.

1) அலகுக்கான பங்களிப்பு
2) இலாப நட்டமற்ற புள்ளியில் விற்பனை வருமானம்
3) பங்களிப்பு விற்பனை வீதம்.
4) பாதுகாப்பு எல்லை அலகுகளில்
5) தற்போதைய இலாபம்.
6) நிறுவனம் ரூபா 30000 இலாபம் அடைய விரும்பின் உற்பத்தி செய்ய வேண்டிய அலகுகள்.
7) நிறுவனம் 400 அலகுகளை உற்பத்தி செய்யுமாயின் ஏற்படக்கூடிய இலாபம் / நட்டம்.

(07 புள்ளிகள்)

07) அ)

விளையாட்டு அரங்கு ஒன்றினை நடாத்தி செல்லும் ‘‘மூன்’’ இளைஞர் கழகத்தின் 31.03.2016 இல் காணப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் வருமாறு.

	(ரூபா 000)
விளையாட்டரங்கு	1000
உடற்பயிற்சி உபகரணங்கள்	1600
நிலுவை சந்தா கட்டணம்	100
முற்பணச் சந்தா கட்டணம்	250
உடற்பயிற்சிக்கான முற்பணங்கள்	80
ஆயுள் சந்தா	1000
உடற்பயிற்சி உபகரண நிதி	600
வங்கி மீதி	250
காசு மீதி	80

31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான தகவல்கள் பின்வருமாறு.

1) சகல பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் காசு மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.
2) வருடாந்த சந்தா கட்டணத்தொகை ரூபா 10000 என்பதுடன் அங்கத்தவர் 100 பேர் காணப்படுகின்றனர். அத்துடன் ரூபா 20000 வீதம் ஆயுட் சந்தா செலுத்திய 50 அங்கத்தவர்கள் உள்ளனர். ஆயுட்சந்தாவில் 10% வருடாந்த சந்தாவாக கருதுவது நிறுவனத்தின் கொள்கையாகும்.

3) வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற சந்தா கட்டணம் ரூபா 850000 ஆகும். இத்தொகையினுள் கடந்த வருட நிலுவை சந்தாக்கட்டணப் பெறுவனவும் எதிர்வரும் வருடத்துக்கு சந்தாக் கட்டணம் செலுத்திய 20 அங்கத்தவர்களது சந்தாத் தொகையும் உள்ளடங்கியுள்ளது. வருட இறுதியில் 20 அங்கத்தவர்கள் இவ்வருடத்தக்கான அங்கத்துவ சந்தா கட்டணத்தை செலுத்தியிருக்கவில்லை.
4) அங்கத்தவர்கள் தவிர்ந்த வெளி நபர்கள் நாளாந்த கட்டணம் ரூபா 400 செலுத்தி உடற்பயிற்சிகள் செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. 52 நாட்களினுள் 50 பேர் உடற்பயிற்சி வசதிகளைப் பெற்றுக்கொண்டு ரூபா 1100000 செலுத்தியுள்ளதுடன் மேலதிகமாக்க கிடைக்கப்பெற்ற தொகையானது எதிர்வரும் வருடத்துக்கான முற்பணத்தொகையாகும்.
5) உடற்பயிற்சி உபகரணங்களுக்கு பொறுப்பாக இருக்கும் ஊழியருக்கு மாதாந்த சம்பளமாக ரூபா 20000 செலுத்தப்படுகிறது.
6) வருடத்தினுள் விளம்பரத்துக்காக ரூபா 160000 மும் ஏனைய செலவுகளுக்காக ரூபா 500000 மும் செலுத்தப்பட்டுள்ளது.
7) விளையாட்டரங்கு, உடற்பயிற்சி, உபகரணங்கள் வருடாந்தம் முறையே 5%, 20% பெறுமானத் தேய்விடல் வேண்டும்.
8) விளையாட்டரங்கு அமைந்துள்ள கட்டிடத்தின் ஒரு பகுதி மேசைப்பந்து விளையாட்டுக்காக வெளிநபர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 20000 ற்கு 31.03.2016 இல் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் 18 மாதங்களுக்கான வாடகையை செலுத்தியுள்ளார்.
9) வருட இறுதியல் ரூபா 100000 த்தை மீதியாக வைத்துக் கொண்டு எஞ்சிய சகலகாசும் வங்கியிலிடப்பட்டது.
10) வருடத்தினுள் உபகரணப் பராமரிப்புக்காக ரூபா 150000 செலவிடப்பட்டுள்ளது.

வேண்டப்படுவன.

1) **31.03.2016 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று.**
2) **31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான**
   - **பெறுவனவு கொடுப்பனவு கணக்கு.**
   - **சந்தா கணக்கு.**
   - **வருமானச் செலவுக்கூற்று.**
   - **உடற்பயிற்சி வருமான கணக்கு.**
   - **31.03.2017 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று.**

(10 புள்ளிகள்)

ஆ)

வரையறுத்த றபேக்கா லிமிட்டெட் ஒரு புதிய இயந்திரத்தை வாங்க விரும்புகிறது. இரண்டு வகையான இயந்திரங்கள் கிடைக்க கூடியதாக உள்ளன. வட்டியை புறக்கணிக்குக. தேறிய உழைப்பில் 50% வரியாக கருத்தில் எடுக்கப்படும். பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

விபரம்	இயந்திரம் A	இயந்திரம் B
கொள்விலை (ரூபா)	240000	360000
இயந்திரங்களின் ஆயுட்காலம் (வருடங்களில்)	10	10
வருடத்துககான இயந்திர செயற்பாட்டு மணித்தியாலங்கள்	12000	12000
மணித்தியாலத்துக்கான வெளியீட்டு அலகுகள்	24	36
செயற்பாட்டு மணித்தியாலத்துக்கான கூலி (ரூபா)	6	8
வருடத்துக்கான வலு (ரூபா)	12000	27000
வருடத்துக்கான பிறசெலவுகள் (ரூபா)	48000	54000
அலகுக்கான மூலப்பொருட் செலவு (ரூபா)	0.50	0.50
அலகுக்கான விற்பனை விலை (ரூபா)	1.50	1.50

பெறுமானத்தேய்வு நேர்கோட்டு முறையில் செய்யப்படுகிறது காசோட்டம் சீராக காணப்படுகிறது. இவ் இயந்திரங்களில் எதனைத் தெரிவு செய்யலாம் என ஆலோசனை தருக. (செய்கைகள் அவசியம்)

(05 புள்ளிகள்)